1990 ஏப்ரல் 17]

100

விருது நகர்—மருதங்குடி நகரப் பேருந்து

வினா எண் 7371—திரு. இரா. சாமிநாதன் ; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) விருதுநகர்—மருதங்குடி (வழி) ஆவல் சூரம்பட்டி, உன்னிப்பட்டி, பேய்க்குளம், சென்னம்பட்டி, குராயர், நொச்சிக் குளம்விலக்கு என்ற வழித்தடத்தில் பாண்டியன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து இயக்கம் நிறுத்தப்பட்டது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் எப்பொழுது முதல் பேருந்து இயக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) விருதுநகர்—காரியாபட்டி (வழி) ஆவல் சூரம் பட்டி, உன்னிப்பட்டி, பேய்க்குளம் விலக்கு மருதங்குடி தடத்தில், பாண்டியன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து இயக்கப் பட்டது. இத் தடத்தில் பேய்க்குளம் முதல் சென்னம்பட்டி வரை சுமார் 3.0 கி.மீ. தொலைவு சாலை போக்குவரத்துக்கு ஏற்றதாக இல்லாததால் தற்போது விருதுநகரிலிருந்து பேய்க்குளம் வரை (வழி) ஆவல் சூரம்பட்டி, உன்னிப்பட்டி இயக்கப்பட்டு வருகின்றது. இதன் தொடர்பாக குறிப்பிட்ட சாலையை சீரமைக்க மதுரை கோட்டப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். எனவே, சாலை சீரமைக்கப்பட்டவுடன் பேருந்து குறிப்பிட்ட தடத்தில் இயக்கப்படும்.

(வினாக்கள்—விடைகள் முடிவுற்றன)

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) வேலை நிறுத்தம் செய்யும் வருவாய்த் துறை அலுவலர்களோடு நடைபெறும் பேச்சு வார்த்தை குறித்து

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அலுவலர்களைப் பொறுத்த வரையிலும் நேற்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த தற்கு ஏற்ப அவர்களுடைய செயற்குழு நேற்று அவசரமாகக் கூடி மாண்புமிகு முதலமைச்சரோடும், வருவாய்த் துறை அமைச்சரோடும் பேச்சுவார்த்தைக்கு செல்வது என்றும்,

அவர்கள் கலந்துகொண்டிருக்கிற அந்தப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டிருக்கிற ஊழியர்கள் விடுதலை செய்யப்பட வேண்டுமென்றும், 700-க்கும் மேற்பட்ட ஊழியர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், 27 நாட்கள் நடத்தப் பட்ட அந்தப் போராட்டத்திற்கு அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படவேண்டுமென்றும், இப்படிப்பட்ட சில கோரிக்கை களை அரசோடு பேசி, இந்தப் பிரச்சினையை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். அரசும் அதற்கு தயார் நிலையிலே இருக்கும் என்று நான் நம்புகிறேன். எனவே, இந்தப் பிரச்சினையை அதிகமான அளவுக்கு வளர்க்காமல் உடனடியாக முடிவிற்குக் கொண்டு வந்து, வருவாய்த் துறை அலுவலர்களுடைய போராட்டத்தை தீர்வு செய்யவேண்டுமென்று நான் உங்கள் மூலமாக மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கேயுள்ள முதலமைச்சருடைய தனி மண்டபத்தினுடைய நிகழ்ச்சியை எட்டிப் பார்த்துவிட்டு வந்திருப்பார் என்று கருதுகின்றேன். இப்போதுதான் வருவாய்த் துறை அலுவலர்களுடைய பிரதி நிதிகள் என்னையும் நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் அந்த இடத்திலே வந்து சந்தித்தார்கள். அவர் களிடம் நான் மீண்டும் சொல்லியிருக்கின்றேன். இன்று அவர் களுடைய குழு கூடுவதாக இருக்கிறது. எல்லாப் பிரச்சினை களையும் பேசிக்கொள்ளலாம். முதலில் நீங்கள் வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெறுவதாக அறிக்கை தாருங்கள் என்று சொல்லி அவர்களும் அதற்கு ஏறத்தாழ சம்மதித்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இந்த நல்ல செய்தியை மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கும், இந்த மன்றத்திற்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

10–25 மணி

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளையாட்டாகச் சொன்னாலும். அப்படி நான் எட்டிப் பார்த்திருந்தால் அப்படியே உங்களையும் பார்த் திருப்பேன். எட்டிப்பார்க்காததால்தான் இங்கே அதைக் கேட்டேன். (சிரிப்பு)

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த அவையிலே இருக்கங்குடி கலவரம் பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் வந்தபோது, அதுகுறித்து

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS